**தலைப்பு 235 - சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 235 - சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 11 ஆந் திகதி திணைக்களத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 16.66 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 13.57 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 3.09 மில்லியன் அதாவது 18.55 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 14.63 | 12.14 | 2.49 | 17.02 |
| மூலதனம் | 2.03 | 1.43 | 0.60 | 29.56 |
| மொத்தம் | **16.66** | **13.57** | **3.09** | **18.55** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 1.20 | 1.13 | 0.20 | 0.85 | 2.50 | 2.20 |

2.3 **கணக்காய்வு அவதானிப்புக்கள்**

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற இரண்டு பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் மேலும் ஒரு பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.2.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் அண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2017 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 3.1.4 மற்றும் 3.1.5 ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட பற்றாக்குறை, மிகைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமலும் அகற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாமலும் தயாரிக்கப்பட்ட வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 02 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 15 | 05 | 10 |
| (iv) | ஆரம்ப நிலை | 07 | 07 | - |
| | மொத்தம் | 29 | 15 | 14 |